திரு. மு. முத்தையா: தலைவரவர்களே, இதை முன்னிட்டு அங்கேயுள்ள போலீஸ் அதிகாரிகள் அரிசனங்களை மிகவும் துன்புறுத்துகிறார்கள். இதை இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவரவர்களே, அறிக்கையிலேயே சொன்னேன், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், போலீஸ் துறையினரும், இந்து சமய அறக்கட்டளைத் துறையினரும் சேர்ந்து அங்கு அமைதி நிலவ ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். அது தொடர்ந்து நடைபெறுவதோடு, காவலும் போடப்பட்டிருக்கிறது.

திரு. மு. முத்தையா: தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு முறைதான் வாய்ப்பு கொடுக்கலாம், முறைப்படி.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு. 1970–71-ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு சட்டப்பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, பதினாறு உறுப்பினர்களும் முறைப்படி நியமனம் செய்யப்பட்டனர். அவர்களின் பெயர்கள் ஆவன:—

1. திரு. என். சங்கரய்யா
2. திரு. ஆ. கு. சுப்பையா
3. திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்
4. திரு. எம். சுரேந்திரன்
5. திரு. பி. ஜி. கருத்திருமன்
6. திரு. தோ. மு. நல்லசாமி
7. திரு. அ. லெ. சுப்பிரமணியம்
8. திரு. கி. ஜயராமன்
9. திரு. எம். கோபால்
10. திரு. சு. துரைசாமி
11. திரு. க. ந. இராமச்சந்திரன்
12. திரு. மு. சண்முகம்
13. திரு. து. ப. அழகமுத்து
14. திரு. நா. கிருட்டிணன்
15. திரு. ம. சொ. கோவிந்தராசன்
16. திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1970—71-ம் ஆண்டு பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக்குழுவின் தலைவர் அவர்களும், அவர்களுடைய அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

மேலும், சட்டப்பேரவையின் 174-வது விதிக்கிணங்க திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.